# கோயம்புத்தூர் மாநகராட்சி

அனுப்புநர்

திரு ஆர். வெங்கடாசலம்,
மேயர்,
கோயம்புத்தூர் மாநகராட்சி,
கோயம்புத்தூர்- 641 001

பெறுநர்

மதிப்பிற்குரிய துணை மேயர் அவர்கள்,
வார்டு குழுத்தலைவர்கள், ஆளும்கட்சி
மற்றும் எதிர் கட்சித் தலைவர்கள்,
நியமனக்குழு உறுப்பினர்,
நிலைக்குழு தலைவர்கள் மற்றும்
அனைத்து மாமன்ற உறுப்பினர்கள்,
கோயம்புத்தூர் மாநகராட்சி.
அனைத்துப் பிரிவுத் தலைமைகள்,
கோயம்புத்தூர் மாநகராட்சி.
சட்டமன்ற உறுப்பினர்கள்
(கோவை கிழக்கு, மேற்கு,
தொண்டாமுத்தூர், பேரூர் மற்றும்
சிங்காநல்லூர் சட்டமன்ற தொகுதிகள்),
பாராளுமன்ற உறுப்பினர்கள்
(கோவை மற்றும் நீலகிரி
பாராளுமன்றத் தொகுதிகள்)

**ந.க.எண் : 15051 / 2008 / எம்சி. 8 நாள் : 21.11.2008**

அய்யா /அம்மா,

பொருள் : கோயம்புத்தூர் மாநகராட்சி – மாமன்ற சாதாரணக் கூட்டம் - நிகழ்ச்சி நிரல் அனுப்புவது - தொடர்பாக.

-----------

கோயம்புத்தூர் மாநகராட்சியின் மாமன்ற சாதாரணக் கூட்டம் வருகின்ற 28.11.2008 வெள்ளிக்கிழமை காலை 10.30 மணிக்கு வணக்கத்திற்குரிய மேயர் அவர்கள் தலைமையில் விக்டோரியா ஹால் மாமன்றக் கூடத்தில் நடைபெற உள்ளது. அது சமயம் அனைத்து மாமன்ற உறுப்பினர்களும் அனைத்து துறைத்தலைமை அலுவலர்களும் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். இக்கூட்டத்திற்கான நிகழ்ச்சி நிரல் இத்துடன் அனுப்பப்படுகிறது.

(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி

இணைப்பு : 1

/ உண்மைநகல் / உத்திரவின்படி/

21.11.08
மாமன்ற செயலாளர்

நகல் :

துணை ஆணையாளர் அவர்கள், கோயம்புத்தூர் மாநகராட்சி
ஆணையாளர் அவர்கள், கோயம்புத்தூர் மாநகராட்சி

நவம்பர் 2008 - மாமன்ற சாதாரண கூட்டம் - நிகழ்ச்சி நிரல்

| பொருளடக்கம் | |
|---|---|
| அ) திருக்குறள் வாசித்து மன்ற நிகழ்ச்சியை துவக்குதல்<br>ஆ) தீண்டாமை பழக்கத்தை கைவிட மேற்கொள்ளும் உறுதிமொழி | |
| வ.எண் | இ). தீர்மானத்திற்குரிய பொருள் |
| 1 | நகரமைப்புப் பிரிவு - வடக்கு மண்டலம் -வார்டு எண் 72 – க.ச.எண். 464 பாகம் உள்ளிட்டவை- 18.96 ஏக்கர் நிலம் –நில உபயோக மாற்றம் செய்தல் -மாமன்ற ஒப்புதல் கோருதல் -தொடர்பாக |
| 2 | மேற்கு மண்டலம் - வார்டு எண் 55 – தெலுங்குபாளையம் - முனியப்ப சுவாமி கோயிலுக்கு வரிவிலக்கு அளித்தல் -மாமன்ற அனுமதி கோருதல் -தொடர்பாக. |
| 3 | மேற்கு மண்டலம் - வார்டு எண் 58 – சீரநாய்க்கன்பாளையம் - ஸ்ரீ ராமலிங்க சௌடேஸ்வரி அம்மன் கோயிலுக்கு வரிவிலக்கு அளித்தல் -மாமன்ற அனுமதி கோருதல் -தொடர்பாக. |
| 4 | மேற்கு மண்டலம் - வார்டு எண் 48 – லைட்ஹவுஸ் சாலை - ஸ்ரீ அங்காளம்மன் கோயிலுக்கு வரிவிலக்கு அளித்தல் -மாமன்ற அனுமதி கோருதல் -தொடர்பாக. |
| 5 | பொறியியல் பிரிவு - கழிவுநீர் அடைப்பு சுத்தம் செய்யும் வாகனம் வாங்குதல் - மாமன்ற அனுமதி வேண்டுதல் -தொடர்பாக. |
| 6 | மேற்கு மண்டலம் - நகரமைப்புப் பிரிவு - பாரதி பார்க் சாலை 7 - 6960 சதுரடி மனையிடம் - நில உபயோக மாற்றம் செய்தல் - மாமன்ற ஒப்புதல் கோருதல் -தொடர்பாக. |
| 7 | மேற்கு மண்டலம் - நகரமைப்புப் பிரிவு - தெலுங்குபாளையம் கிராமம் க.ச.எண். 319 பாகம் முதலியன – 4.31 ஏக்கர் நிலம் - நில உபயோக மாற்றம் செய்தல் - மாமன்ற ஒப்புதல் கோருதல் -தொடர்பாக. |
| 8 | பொது சுகாதாரப் பிரிவு - தமிழ்நாடு சுகாதார முறைத்திட்டம் - ஆம்புலன்ஸ் வாங்கி வழங்குதல் - மாமன்ற ஒப்புதல் கோருதல் - தொடர்பாக. |
| 9 | மேற்கு மண்டலம் - சாஸ்திரி மைதானம் - வாடகைக்கு அனுமதித்தல் மாமன்ற ஒப்புதல் கோருதல் -தொடர்பாக. |
| 10 | நகரமைப்புப் பிரிவு - ஆர்.எஸ். புரம் அருணாசலம் சாலை மாநகராட்சி குடியிருப்பு - அரசு ஆணையின்படி கிரையம் செய்தல் - மாமன்ற ஒப்புதல் கோருதல் - தொடர்பாக. |
| 11 | மேற்கு மண்டலம் - நகரமைப்புப் பிரிவு - வார்டு எண் 49 – டி.எஸ். எண் 147/2 முதலியன – 39 சென்ட் இடம் - பலமாடி கட்டிடம் கட்டும் பகுதியாக அறிவித்தல் - மாமன்ற ஒப்புதல் கோருதல் -தொடர்பாக. |
| 12 | Jnnurm – நகர்ப்புற ஏழ்மை மக்களுக்கான அடிப்படை வசதிகள் மேம்படுத்துதல் திட்டம் - 3 குடிசைப் பகுதிகள் - நத்தமாக நிலமாற்றம் செய்தல் - மாமன்ற ஒப்புதல் கோருதல் -தொடர்பாக. |
| 13 | பொறியியல் பிரிவு - 7 அபிவிருத்திப் பணிகள் செய்தல் -மாமன்ற ஒப்புதல் கோருதல்- தொடர்பாக. |
| 14 | நகரமைப்புப் பிரிவு - பொதுமக்களுக்கும், போக்குவரத்திற்கும் இடையூறாக உள்ள மத வழிபாட்டு கட்டிடங்கள் - மாற்றியமைத்தல் - மாமன்ற ஒப்புதல் கோருதல் -தொடர்பாக. |
| 15 | வடக்கு மண்டலம் - நகரமைப்புப் பிரிவு - வார்டு எண் 3 – நில பரிவர்த்தனை செய்தல் - சாலையின் போக்கை நேர் செய்தல் - மாமன்ற ஒப்புதல் கோருதல் -தொடர்பாக. |
| 16 | பொறியியல் பிரிவு - குடிநீர் கட்டணம் கணக்கெடுப்பு - மகளிர் சுய உதவிக் குழுவிற்கு கட்டணம் உயர்வு செய்து ஒப்படைத்தல் - மாமன்ற அனுமதி கோருதல் -தொடர்பாக. |
| 17 | வடக்கு மண்டலம் - சொத்து வரி – தீர்ப்பாயத்தால் தீர்ப்பு வழங்கப்பட்டது – அமுல்படுத்துதல் - மாமன்ற ஒப்புதல் கோருதல் - தொடர்பாக. |

நன்றியுரை

## திருக்குறள்

**தக்கார் தகவிலர் என்ப தவரவர்**
**எச்சத்தாற் காணப் படும்.**

(குறள் -114)

## விளக்கம்

**ஒருவர் நேர்மையானவரா அல்லது நெறி தவறி, நீதி தவறி நடந்தவரா என்பது அவருக்குப்பின் எஞ்சி நிற்கப்போகும் புகழ்ச் சொல்லைக் கொண்டோ அல்லது பழிச்சொல்லைக் கொண்டோதான் நிர்ணயிக்கப்படும்.**

திருவள்ளுவர்.

---

## ஆ. தீண்டாமை பழக்கத்தை கைவிட மேற்கொள்ளும் உறுதிமொழி

**இந்திய அரசியலமைப்பின்பால், இடைவிடாத உளமார்ந்த பற்றுள்ள இந்தியக் குடிமகனாகிய/குடிமகளாகிய நான், நமது அரசியல் அமைப்பின்படி, தீண்டாமை ஒழிக்கப்பட்டுவிட்டது என்பதை அறிவேன். தீண்டாமையை அடிப்படையாகக் கொண்டு, எவர்மீதும் சமூக வேற்றுமையை, மனம்,வாக்கு,செயல் என்ற எந்த வகையிலும் கடைபிடிக்க மாட்டேன் என்று இதனால் உளமார உறுதி அளிக்கிறேன். அரசியலமைப்பின் அடிப்படைக் கருத்திற்கிணங்க, சாதி, சமய வேறுபாடற்ற சமத்துவ சமுதாயத்தை உருவாக்குவதில் நேர்மையுடனும், உண்மையுடனும் பணியாற்றுவது எனது கடமையாகும். மேலும், தீண்டத்தகாதவர்கள் என்ற கொடுமைக்கு ஆளாகியுள்ள மக்களிடையே காணப்படும் தீண்டாமை உணர்வையும் போக்குவது நமது சமூகக் கடமை என்பதையும் உணர்ந்து செயல்படுவேன். இந்திய அரசியல் அமைப்பின்பால் எனக்குள்ள முழுப் பற்றிற்கும் இது என்றென்றும் எடுத்துக்காட்டாக விளங்குமென்றும் இதனால் உளமார உறுதியளிக்கிறேன்.**

---

## சிறப்புத் தீர்மானம் எண் 1

தமிழ்நாடு மின்சார வாரியம் சமீபத்தில் ஏழை எளிய மக்கள் வசிக்கும் வீடுகளுக்கு மின்இணைப்பு தருவது குறித்து, உள்ளாட்சி அமைப்புகளில் தடையின்மை சான்று பெற்று வந்தால் புதிய மின்இணைப்பு தரப்படும் என்ற நிபந்தனையை விதித்துள்ளனா். அதற்கு ஏழை நடுத்தர மக்கள் புதிய வீடுகளை கட்டி உள்ளாட்சி அமைப்புகளிடம் புதிய வரிவிதிப்பையும் செய்திருந்த நிலையிலும் நமது மாநகராட்சி போன்ற பெரிய உள்ளாட்சி அமைப்புகளில் தடையின்மை சான்று இதுவரை வழங்கவில்லை.

எனவே 1000 சதுரடி உள்ள வீடுகளுக்கும் மற்றும் அதற்கு கீழ் உள்ள வீடுகளுக்கும் கோவை மாநகராட்சியால் தடையின்மை சான்று வழங்க ஆவன செய்யவேண்டும் என இக்கூட்டத்தின் வாயிலாக தீா்மானம் நிறைவேற்றி ஏழை எளிய மக்களுக்கு மின் இணைப்பை வழங்க தீா்மானம் நிறைவேற்ற வேண்டுமாய் கேட்டுக் கொள்ளப்படுகிறது.

<u>மா.ந.ம.தீா்மானம் எண் : 280 நாள் : 28.11.2008</u>

தீா்மானம் நிறைவேற்றப்பட்டது.

(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்
மேயா்
கோயம்புத்தூா் மாநகராட்சி

---

30.10.2008 ம் தேதிய மாமன்ற சாதாரணக் கூட்டத்தில் ஒத்திவைக்கப்பட்ட பொருள் மன்றத்தின் ஒப்புதலுக்கு மீண்டும் சமா்ப்பிக்கப்படுகிறது.

## பொருள் எண் 1

கோயம்புத்தூா் மாநகராட்சி வாா்டு எண்-72ல் க.ச.எண் 464 பாகம், 465, 466, 467, 468 பாகம் மற்றும் 469/1 பாகம் கணபதி கிராமம் இடத்தில் 18.96 ஏக்கா் கொண்ட ராமகிருஷ்ணா மில் வளாகம் உள்ளது. மனுதாரரின் மனையிடம் தொழிற்சாலை பயன்பாட்டு பகுதியில் அமைந்துள்ளது. இதனை கலப்பு குடியிருப்பு நில உபயோகமாக மாற்றம் செய்ய கேட்டுள்ளாா்.

மனையிடம் சத்தியமங்கலம் சாலையை அணுகு சாலையாக கொண்டு அமைந்துள்ளது. மனையிடம் கணபதி விரிவு அபிவிருத்தித் திட்டம் எண்-3லும், முழுமைத் திட்டத்தின்படி தொழிற்சாலைப் பயன்பாட்டில் அமைகிறது.

மனையிடத்தின் தென்புறம் உள்ள சாலை 80’-0” ஆக அகலப்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது. இடத்தில் 40’-0” அகலம் உள்ளது. இருபுறமும் 20’-0” அகலப்படுத்தப்பட வேண்டும். எனவே, மனுதாரரின் மனையிடத்தின் தென்புறம் 20’-0” அகலம் சாலைக்காக விஸ்தரிப்பு செய்யப்படவேண்டும். இதனை மனுதாரரிடம் இருந்து மாநகராட்சிக்கு தானமாக பெறலாம்.

மனுதாரரின் க.ச.எண்-464 பாகம், 465, 466, 467, 468பாகம் மற்றும் 469/1 பாகம் கணபதி கிராமம் 18.96 ஏக்கா் பரப்புள்ள இடத்தை தொழிற்சாலை பயன்பாட்டில் இருந்து கலப்பு குடியிருப்பு பயன்பாட்டிற்கு மாற்றம் செய்வது குறித்து தீா்மானிக்க, நகரமைப்பு மற்றும் அபிவிருத்திக் குழுவின் முடிவிற்கு பொருள் சமா்ப்பிக்கப்பட்டதில் குழு தனது தீா்மான எண். 65 நாள் 22.09.2008 ல் "அவினாசி சாலையை சத்தி சாலை வழியாக, மேட்டுப்பாளையம் சாலையை இணைக்கும் 9 கி.மீ நீளத்தில் 80’ சராசரி அகலத்தில் அமைக்கும் திட்டம் மாமன்ற ஒப்புதலுடன் அரசுக்கு அனுப்பி ஆய்வில் உள்ளதாலும், மேற்படி சாலைக்கு இப்பொருள் பற்றிய நிலத்தின் வழியே செல்ல உத்தேசித்திருப்பதாலும் மேற்படி சாலை விஸ்தரிப்புக்குரிய நிலத்தை மாநகராட்சிக்கு தானமாக ஒப்படைக்க வேண்டும் என்கிற நிபந்தனையுடன் பொருளை மாமன்றத்திற்கு பரிந்துரைக்க தீா்மானிக்கப்பட்டது" என்று தீா்மானம் நிறைவேற்றியுள்ளதை மாநகர மன்றத்தின் ஒப்புதலுக்கு பொருள் சமா்ப்பிக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு -மாமன்றத்தின் ஒப்புதலுக்கு ந.க.எண். 7060 / 08 / எச்2 (வ)

**மா.ந.ம.தீர்மானம் எண் : 281 நாள் : 28.11.2008**

பொருளில் குறிப்பிடப்பட்டுள்ள நிலத்திற்கு தென்புறமுள்ள, கிழமேலாக செல்லும் சின்னவேடம்பட்டி செல்லும் சாலையின் அகலத்தை 60' அகல சாலையாக மாற்றத் தேவையான இடத்தை கட்டிட வரைபட ஒப்புதல் பெறும்பொழுது நிலத்தின் உரிமையாளர் மாநகராட்சி வசம் தானமாக ஒப்படைக்க வேண்டும் என்ற நிபந்தனையுடன் பொருளில் குறிப்பிடப்பட்டுள்ள 18.96 ஏக்கர் நிலத்தினை நகரமைப்பு மற்றும் அபிவிருத்தி நிலைக்குழுவின் 22.09.2008 ம் தேதிய தீர்மானம் எண். 65 ஐ ஏற்று தொழிற்சாலை உபயோகத்திலிருந்து கலப்பு குடியிருப்பு பகுதியாக நிலஉபயோக மாற்றம் செய்யவும், பலஅ டுக்குமாடி கட்டிடம் கட்டும் பகுதியாக அறிவிப்பு செய்யவும் தீர்மானிக்கப்பட்டது.

பொருளில் குறிப்பிடப்பட்டுள்ள நிலத்திற்கு எதிர்புறமுள்ள குடியிருப்புகள் அதிகம் பாதிக்காத வகையில், கிழமேலாக செல்லும் சின்னவேடம்பட்டி சாலையின் அகலத்தை 60' சாலையாக அமைக்கவும் தீர்மானிக்கப்பட்டது.

(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி

---

**பொருள் எண் 2**

பொருள் - கோயம்புத்தூர் மாநகராட்சி – மேற்கு மண்டலம் - 55 வது வார்டு தெலுங்குபாளையம் முனியப்ப சுவாமி கோவிலுக்கு சொத்து வரியில் இருந்து விலக்கு அளித்தல் - தொடர்பாக.

----------------

கோயம்புத்தூர் மாநகராட்சி, மேற்கு மண்டலம், 55 வது வார்டு தெலுங்குபாளையம் முனியப்ப சுவாமி கோவிலுக்கு நிரந்தர வருமானமோ அல்லது வாடகை தரக்கூடிய கட்டிடங்களோ இல்லை.

மாநகராட்சி சட்டப்பிரிவு 123(a)-ன்படி மேற்படி கோவிலுக்கு சொத்துவரி செலுத்துவதிலிருந்து விலக்களிக்க வரி விதிப்பு மற்றும் நிதிக்குழு தீர்மான எண். 51 நாள். 25.08.08-ன்படி ஒப்புதல் அளித்துள்ளது.

எனவே மாமன்றத்தின் அனுமதி வேண்டி பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு - அனுமதிக்கலாம். ந.க.எண். 6460/08/அ4 (மே)

**மா.ந.ம.தீர்மானம் எண் : 282 நாள் : 28.11.2008**

வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுவின் 25.08.08 ம் தேதிய தீர்மானம் எண். 51-ஐ ஏற்று அலுவலகக் குறிப்பு அனுமதிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி

---

**பொருள் எண் 3**

பொருள் - கோயம்புத்தூர் மாநகராட்சி – மேற்கு மண்டலம் - 58 வது வார்டு உட்பட்ட சீரநாய்க்கன்பாளையம் ஸ்ரீ ராமலிங்க சௌடேஸ்வரி அம்மன் கோவிலுக்கு சொத்து வரி செலுத்துவதில் இருந்து விலக்கு அளித்தல் - தொடர்பாக.

----------------

கோயம்புத்தூர் மாநகராட்சி, 58 வது வார்டு சீரநாய்க்கன்பாளையம் ஸ்ரீ ராமலிங்க சௌடேஸ்வரி அம்மன் கோவிலுக்கு எவ்வித நிரந்தர வருமானமும் இல்லாததாலும் மேலும் மேற்படி கோவிலில் வாடகை வரக்கூடிய கட்டுமானங்கள் ஏதும் இல்லாததாலும் கோவை மாநகராட்சி சட்டப்பிரிவு 123 (a)-ன்படியும் (மற்ற உபயோகம் இல்லாத பொது வழிபாட்டு இடத்திற்கானது) மேற்படி சட்டப்பிரிவு 123(a) –ல் சேர்க்கப்பட்ட கூடுதல் விளக்கத்தின்படியும் (குறிப்பிட்ட சமுதாயத்தினர் வணங்கும் இடத்திற்கும் சலுகை நீட்டிக்கப்பட்டது) மேற்படி கோவிலுக்கு சொத்துவரி செலுத்துவதிலிருந்து விலக்களிக்க வரி விதிப்பு மற்றும் நிதிக்குழு தீர்மான எண். 52 நாள். 25.08.08-ன்படி ஒப்புதல் அளித்துள்ளது.

எனவே மாமன்றத்தின் அனுமதி வேண்டி பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு - அனுமதிக்கலாம். ந.க.எண். 4421/08/அ5 (மே)

**மா.ந.ம.தீர்மானம் எண் : 283 நாள் : 28.11.2008**

வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுவின் 25.08.08 ம் தேதிய தீர்மானம் எண். 52-ஐ ஏற்று அலுவலகக் குறிப்பு அனுமதிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி

---

**பொருள் எண் 4**

பொருள் - கோயம்புத்தூர் மாநகராட்சி – மேற்கு மண்டலம் - 48 வது வார்டு - லைட் ஹவுஸ் சாலை ஸ்ரீ அங்காளம்மன் கோவிலுக்கு சொத்து வரியில் இருந்து விலக்கு அளித்தல் தொடர்பாக.

கோயம்புத்தூர் மாநகராட்சி, மேற்கு மண்டலம், 48-வது வார்டு லைட் ஹவுஸ் சாலையில் உள்ள ஸ்ரீ அங்காளம்மன் கோவிலுக்கு சொந்தமான வருமானம் வரக்கூடிய கட்டிடங்கள் மற்றும் கடைகள் ஏதும் இல்லை. மாநகராட்சி சட்டப்பிரிவு 123 (a) –ன்படி மேற்படி கோவிலுக்கு சொத்து வரி செலுத்துவதிலிருந்து விலக்களிக்க வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு தீர்மான எண் 50 நாள் 25.08.08 –ன்படி ஒப்புதல் அளித்துள்ளது.

எனவே மாமன்றத்தின் அனுமதி வேண்டி பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு - அனுமதிக்கலாம். ந.க.எண். 6466/08/அ 4 (மே)

**மா.ந.ம.தீர்மானம் எண் : 284 நாள் : 28.11.2008**

வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுவின் 25.08.08 ம் தேதிய தீர்மானம் எண். 50-ஐ ஏற்று அலுவலகக் குறிப்பு அனுமதிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி

---

**பொருள் எண் 5**

கோவை மாநகராட்சி பகுதிகளில் ஏற்படும் கழிவுநீர் அடைப்பை சரிசெய்ய தற்பொழுது உள்ள வாகனங்கள் போதாத நிலையில் உள்ளது. தற்பொழுது கோவை மாநகராட்சி வசம் ஒரு கழிவுநீர் அடைப்பை சுத்தம் செய்யும் வாகனம் (Jetting cum Suction machine) உள்ளது. இவ்வாகனங்களை கூடுதலாக வாங்குவதற்கு கடந்த மாமன்ற கூட்டங்களில் பல மாமன்ற உறுப்பினர்கள் வலியுறுத்தி உள்ளனர். இதனை சுகாதாரக்குழுத் தலைவர், பணிக்குழுத் தலைவர், ஆணையாளர் மற்றும் வணக்கத்திற்குரிய மேயர் அவர்களும் அறிவுறுத்தி உள்ளனர்.

எனவே மூன்று வாகனங்கள் புதியதாக வாங்கப்பட்டால் நான்கு மண்டலத்திற்கும் தற்பொழுது உள்ள வாகனத்துடன் தலா ஒரு வாகனம் வீதம் ஒதுக்கீடு செய்து பணிகளை விரைவாக முடிக்கலாம். எனவே அரசு நிர்ணயித்த விலையில் (DGSD) மூன்று வாகனங்கள் வாங்குவதற்கு உத்தேச செலவினம் ரூ. 1.00 கோடி ஆகும். 2008.09 திட்ட மதிப்பீட்டில் இதற்காக ரூ. 1.50 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

எனவே மூன்று எண்ணிக்கைகள் கழிவுநீர் அடைப்பை சுத்தம் செய்யும் வாகனங்கள் (Jetting cum Suction machine) அரசு நிர்ணயித்த விலையில் (DGSD) வாங்குவதற்குண்டான செலவினம் ரூ. 1.00 கோடிக்கு அனுமதி வேண்டியும், இவ்வாகனங்கள் வாங்குவதற்கு நகராட்சி நிர்வாக ஆணையாளர் அவர்களுக்கு பரிந்துரை செய்யவும் மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு - அனுமதிக்கலாம். ந.க.எண். 15349/2008/ எம்.டி. 3

**மா.ந.ம.தீர்மானம் எண் : 285 நாள் : 28.11.2008**

அலுவலகக் குறிப்பு அனுமதிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி

---

## பொருள் எண் 6

பொருள். கோயம்புத்தூர் மாநகராட்சி – மேற்கு மண்டலம் - டி.எஸ். வார்டு எண். 12 –ன் பகுதியில் அமைந்துள்ள பாரதிபார்க் சாலை எண். 7-ன் பகுதியில் உள்ள டி.எஸ். எண். 91 / 1B மற்றும் 91 / 1C1 –ன் பகுதியில் அமைந்துள்ள மனையிடத்தின் நில உபயோகத்தினை தொழிற்சாலை பகுதியிலிருந்து குடியிருப்பு பகுதியாக நிலஉபயோக மாற்றம் செய்து தரக்கோரி மனுதாரர் திரு. என். சாத்தப்பன் அவர்களின் 9.7.2008 –ம் நாளிட்ட மனு தொடர்பாக.

* * *

கோயம்புத்தூர் மாநகராட்சி, மேற்கு மண்டலம், டி.எஸ். வார்டு எண். 12-ன் பகுதியில் அமைந்துள்ள பாரதிபார்க் சாலை எண். 7-ன் பகுதியில் உள்ள டி.எஸ். எண். 91 / 1B மற்றும் 91/1C1 –ன் பகுதியில் அமைந்துள்ள மனையிடத்தின் நில உபயோகத்தினை தொழிற்சாலை பகுதியிலிருந்து குடியிருப்பு பகுதியாக நில உபயோக மாற்றம் செய்து தரக்கோரி உள்ளூர் திட்டக் குழுமத்தின் மூலம் நகர் ஊரமைப்பு இயக்குநர் அவர்களுக்கு விண்ணப்பத்துள்ளார்.

நில உபயோக மாற்றம் செய்யக் கோரும் மனையிடம் 6960 ச.அடி அல்லது 15 செண்ட் மற்றும் 426 ச.அடி பரப்பு கொண்டதாக அமைகிறது. இம்மனையிடம் அங்கீகரிக்கப்பட்ட நகரமைப்பு திட்ட எண். 6-ன் பகுதியில் அமைகிறது. இத்திட்டத்தின்படி இப்பகுதி தொழிற்சாலை மற்றும் வணிகப்பகுதியாக அமைகிறது. இம்மனையிடத்திற்கு அணுகுபாதையாக நிலையில் உள்ள மாநராட்சியின் தார்சாலை அமைகிறது. மேலும் இத்திட்டத்தின்படி இம்மனையிடத்தில் திட்டசாலை ஏதும் உத்தேசிக்கப்படவில்லை. மற்றும் இம்மனையிடத்தின் நீளம் வடபுறத்தில் 119 அடியாகவும், தென்புறத்தில் 113 அடியாகவும், மேலும் மனையின் அகலம் 60 அடியாக கிழுபுறத்திலும் மற்றும் மேல்புறத்திலும் அமைகிறது. நில உபயோகம் மாற்றம் செய்ய நகர் ஊரமைப்பு இயக்குநர் அவர்களின் முன் அனுமதி பெறப்பட வேண்டும். இதன்படி மனுதாரர் நகர் ஊரமைப்பு இயக்குநர் அவர்களுக்கு விண்ணப்பித்துள்ளார்.

எனவே நில உபயோக மாற்றம் செய்யக் கோரி மனுதாரர் சமர்ப்பித்துள்ள விண்ணப்பம் மற்றும் வரைபடத்தினை மேல் நடவடிக்கைக்காக உள்ளூர் திட்டக் குழுமத்தின் மூலம் நகர் ஊரமைப்பு இயக்குநர் அவர்களுக்கு அனுப்ப நகரமைப்பு மற்றும் அபிவிருத்தி நிலைக்குழுவிற்கு பொருள் சமர்ப்பிக்கப்பட்டதில் குழு தனது தீர்மான எண். 60 நாள் 22.09.2008-ல் "மாமன்றத்திற்குப் பரிந்துரை செய்ய தீர்மானிக்கப்பட்டது" என்று தீர்மானம் நிறைவேற்றியுள்ளதை மாநகர மன்றத்தின் ஒப்புதலுக்கு பொருள் சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு - மாமன்றத்தின் ஒப்புதலுக்கு ந.க.எண். 6960 / 2008 / எச் -1 (மே)

**மா.ந.ம.தீர்மானம் எண் : 286 நாள் : 28.11.2008**

நகரமைப்பு மற்றும் அபிவிருத்தி நிலைக்குழுவின் 22.09.08 ம் தேதிய தீர்மானம் எண். 60-ஐ ஏற்று பொருளில் குறிப்பிடப்பட்டுள்ள நிலத்தினை தொழிற்சாலை நில உபயோகத்திலிருந்து குடியிருப்பு நில உபயோகமாக மாற்றம் செய்ய ஒப்புதல் வழங்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி

---

## பொருள் எண் 7

மனுதாரர் பொது மேலாளர், தி பாம்பே பர்மா டிரேடிங் கார்ப்பரேஷன் லிமிடெட், மும்பை -1, தெலுங்குபாளையம் கிராமம் க.ச. எண். 319 பா மற்றும் க.ச. எண். 321 பகுதியில் அமைந்துள்ள 4.31 ஏக்கர் நிலப்பரப்பில் உள்ள விவசாய உபயோகத்தில் இருந்து குடியிருப்பு பகுதியாக நில உபயோக மாற்றம் செய்து தரும்படி விண்ணப்பித்துள்ளார்.

நில உபயோக மாற்றம் கோரும் இடம் தெலுங்குபாளையம் கிராமம் விரிவு அபிவிருத்தி திட்ட எண். 3 விவசாய உபயோகப் பகுதியில் வருகிறது. மனுதாரர் நிலம் மாநகராட்சியின் பராமரிப்பில் உள்ள தார் சாலையினை ஒட்டி அமைகிறது.

நிலப்பரப்பின் விபரம்

| | |
|---|---|
| தெலுங்குபாளையம் கிராமம் க.ச. எண். 319 / 2 | = 1.27 ஏக்கர் |
| தெலுங்குபாளையம் கிராமம் க.ச. எண். 320 / 1 | = 2.70 ஏக்கர் |
| தெலுங்குபாளையம் கிராமம் க.ச. எண். 321 | = 0.34 ஏக்கர் |
| மொத்தம் | = 4.31 ஏக்கர் |

வட்டாச்சியர் வடக்கு அவர்கள் ப.மு எண். 10887 / 08 / அ8 நாள். 5.08.2008 –ல் தடையின்மை சான்று வழங்கியுள்ளார்.

இதில், கோயம்புத்தூர் வடக்கு வட்டம்<br>
தெலுங்குபாளையம் கிராமம் க.ச. எண். 319/பி2 = 1.27 ஏக்கர்<br>
தெலுங்குபாளையம் கிராமம் க.ச. எண். 320 / 1 = 2.70 ஏக்கர்<br>
தெலுங்குபாளையம் கிராமம் க.ச. எண். 321 = 0.34 ஏக்கர்

ஆக மொத்தம் 4.31 ஏக்கர் பூமி, கோயம்புத்தூர் நெ.2 இணை சார்பதிவாளர் அலுவலக பின்வரும் கிரைய ஆவணங்களின்படியும், தெலுங்குபாளையம் கிராம பட்டா எண். 384 –ன்படியும், தி பாம்பே பர்மா டிரேடிங் கார்ப்பரேஷன் லிட் என்னும் நிறுவனத்திற்காக அதன் பொது மேலாளர் திரு. எம்.சி. முத்தண்ணா என்பவருக்கு பாத்தியப்பட்டுள்ளது.

கிராமச் சிட்டாவில் பட்டா எண். 384 –ல் இந்நிறுவனத்தின் பெயர் தாக்கலாகியுள்ளது எனவும் அவ்வாறு பாத்தியப்பட்டுள்ள மேற்கூறிய 4.31 ஏக்கர் பூமியில்

1. நிலம் கையகப்படுத்தும் சட்டம் 1894 பிரிவு 4(1) –ன் கீழ் அறிவிப்பு எதுவும் இவ்வலுவலகத்தை பொறுத்தமட்டில் செய்யப்படவில்லை.
2. அரசு புறம்போக்கு நிலங்கள் எதும் சேரவில்லை.
3. மழை மற்றும் வெள்ளப்பெருக்கால் பாதிப்பில்லை.
4. நிலச் சீர்திருத்த சட்டம் 1961 –ன் கீழ் பாதிப்பில்லை.
5. புராதானச் சின்னங்கள் எதுவுமில்லை.
6. உயர் மின்னழுத்த கம்பிகள் எதுவும் செல்வதில்லை.

என வட்டாச்சியர் வடக்கு சான்றிதழ் வழங்கியுள்ளார்.

மனுதாரர் மனையிடத்தின் மொத்த பரப்பளவு அடங்கிய வரைபடம் விபரமான அளவுகளுடன் நகரளவையர் வரைபடம் சமர்ப்பித்து உள்ளார். மனுதாரர் இடத்திற்கு கோயம்புத்தூர் தொண்டாமுத்தூர் சாலை, தார் சாலை அணுகு சாலையாக அமைகிறது.

மனுதாரர் மனையிடத்தினை சுற்றியும் உள்ள வேடபட்டி, வீரகேரளம் விரிவு அபிவிருத்தி திட்டங்கள் உள்ளது. மேலும் குமாரபாளையம் விரிவு அபிவிருத்தி திட்டம் அமைகிறது. மேற்கண்ட விரிவு அபிவிருத்தி திட்டங்களின் சந்திப்பு பகுதியில் மனுதாரர் நிலப்பரப்பு அமைகிறது. இதனை ஒருங்கிணைத்த வரைபடம் சுற்றுப்புற விபரங்களுடன் சமர்ப்பிக்கப்படுகிறது.

மனுதாரா் தமது நிலப்பரப்பிற்கு செலுத்திய வரி ரசீது கிராம நிா்வாக அலுவலரிடம் பெறப்பட்டதை இணைத்துள்ளாா். மனுதாரா் நிலப்பரப்பில் வருவாய் துறை நில ஆா்ஜிதம் ஏதும் இல்லை.

மனுதாரா் நில உபயோக மாற்றம் கோரும் இடம் ஏரிப்பகுதியினை ஒட்டி அமைகிறது. இப்பகுதியினை ஒட்டி 15 மீட்டா் தொலைவிற்கு எவ்வித கட்டுமானங்களும் மேற்கொள்ள கூடாது. மேலும் மண் உறுதித் தன்மை தொடா்பாக தகுதி பெற்ற நிறுவனத்திடம் மண் பரிசோதனை சான்றிதழ் பெற்ற பின்னா் உரிய அனுமதி பெற்று கட்டுமானங்களை மேற்கொள்ளப்பட வேண்டும்.

மனுதாரரின் வேண்டுகோள் 4.31 ஏக்கா் நிலப்பரப்பினை விவசாய நில உபயோகத்தில் இருந்து கலப்பு குடியிருப்பு (Mixed Residential) நில உபயோகமாக, மாற்றம் செய்வது தொடா்பாக நகரமைப்பு அபிவிருத்தி குழுவின் ஒப்புதல் பெற்று மாமன்றத்தின் அனுமதி பெறலாம். மேற்காண் குறிப்பு பாா்வைக்கும் ஒப்புதலுக்கும் பணிந்து சமா்ப்பிக்கப்பட்டதில் குழு தனது தீா்மான எண். 62 நாள். 22.09.2008 -ல் “ பொருளில் குறிப்பிட்ட நிபந்தனைகளுக்குட்பட்டு பொருளில் குறிப்பிட்ட இடத்தினை விவசாய நில உபயோகத்திலிருந்து குடியிருப்பு நில உபயோகமாக மாற்றம் செய்ய மாமன்றத்திற்கு பரிந்துரை செய்ய தீா்மானிக்கப்பட்டது” என்று தீா்மானம் நிறைவேற்றியுள்ளதை மாநகர மன்றத்தின் ஒப்புதலுக்கு பொருள் சமா்ப்பிக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு -மாமன்றத்தின் ஒப்புதலுக்கு ந.க.எண்.8364 /08 / எச் 1 (மே)

<u>மா.ந.ம.தீா்மானம் எண் : 287 நாள் : 28.11.2008</u>

நகரமைப்பு மற்றும் அபிவிருத்தி நிலைக்குழுவின் 22.9.08 ம் தேதிய தீா்மானம் எண். 62-ஐ ஏற்று பொருளில் குறிப்பிடப்பட்டுள்ள 4.31 ஏக்கா் நிலப்பரப்பினை பொருளில் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகளுடன் விவசாய நில உபயோகத்தில் இருந்து கலப்பு குடியிருப்பு நில உபயோகமாக மாற்றம் செய்ய ஒப்புதல் வழங்கலாம் என தீா்மானிக்கப்பட்டது.

இத்தீா்மானத்திற்கு மாா்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியைச் சோ்ந்த 3-வது வாா்டு மாமன்ற உறுப்பினரும், அ.இ.அ.தி.மு.க.-வைச் சோ்ந்த 56-வது வாா்டு மாமன்ற உறுப்பினரும் ஆட்சேபனையைப் பதிவு செய்தனா்.

(ஒப்பம்) ஆா். வெங்கடாசலம்
மேயா்
கோயம்புத்தூா் மாநகராட்சி

---

## பொருள் எண் 8

பொருள் :- தமிழ்நாடு சுகாதார முறைத் திட்டம் - அவசர மேலாண்மை மருத்துவ சிகிச்சை பணிகள் நிறுவுதல் - பல்வேறு வகையான அவசர நோயாளிகள், விபத்தில் பலியாகுதல் - அவசர மருத்துவ சிகிச்சை மேலாண்மை ஆராய்ச்சி நிலையம், ஹைதராபாத் மூலம் பணிகள் மேற்கொள்ளுவது - 20 ஆம்புலன்ஸ் வாங்கி வழங்குவது - தொடா்பாக

பாா்வை மாமன்ற தீா்மான எண். 119. நாள். 17.06.2008

***********

அரசு ஆணை எண்.137. சுகாதாரம் மற்றும் குடும்பநலம் (EAP 1/1) துறை நாள்.05.05.2008-ல் சாலை விபத்துகள், தற்கொலை, கொலை குற்றம் போன்ற நிகழ்வுகளில் உயிா்காப்பதற்கு உடனடி மருத்துவ சிசிக்சை முக்கிய பங்கு வகிக்கிறது. மேலும் மருத்துவ பணிக்கு ஆம்புலன்ஸ் வசதி மருத்துவ கல்லூரி மருத்துவமனை, அரசு மருத்துவமனையுடன் இணைந்து 24 மணி நேரமும் செயல்பட்டால் சாலை விபத்துகள், கா்ப்பிணி தாய்மாா்கள், அவசர நோயாளிகள், பிரசவ வலிதாய்மாா்கள், தற்கொலை போன்ற விலைமதிப்புள்ள உயிா்களை காப்பாற்ற முடியும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதன்படி மேற்காண் அரசு ஆணையில் தமிழ்நாடு முழுவதும் ஒருங்கிணைந்த அவசர மருத்துவ சிகிச்சை மேலாண்மை பணியை அவசர சிகிச்சை மேலாண்மை ஆராய்ச்சி நிலையம் ஹைதராபாத் மூலம் செயல்படுத்துவதற்கு புரிந்துணா்வு ஒப்பந்தம் (MOU) தமிழநாடு அரசு மூலம் செய்யப்பட்டுள்ளது.

மேலும், மாநகராட்சி பகுதியில் உள்ள மக்களுக்கு அவசர மருத்துவ சிகிச்சை மேலாண்மை பணிகள் மூலம் ஆம்புலன்ஸ் வசதி ஏற்படுத்துவதற்கு மாநகராட்சி நிதி மூலம் ஆம்புலன்ஸ் வாங்கி அவசர மருத்துவசிகிச்சை மேலாண்மை ஆராய்ச்சி நிலையம் ஹைதராபாத் நிறுவனத்தின் மூலம் பொது மக்களுக்கு அவசர மருத்துவ வசதிகள் அளிக்கப்படும் என்று தெரிவித்துள்ளார்கள். இந்த, ஆம்புலன்ஸ் வாகனங்களுக்கு எரிபொருள், பராமரிப்பு செலவு ஆகியவை மேற்காண் நிறுவனத்தின் மூலம் மேற்கொள்ளப்பட்டு மாநகராட்சி பகுதி மக்களுக்கு இலவசமாக ஆம்புலன்ஸ் வசதி அளிக்கப்படும் என கூறப்பட்டுள்ளது.

சிறப்பு செயலாளர், சுகாதாரம் மற்றும் குடும்ப நலத்துறை மற்றும் திட்ட இயக்குநர் சுகாதார முறைத் திட்டம், சென்னை அவர்களின் நேர்முக கடிதம் எண். 2216/A1/2008. 27.05.2008- ல் கோயம்புத்தூர் மாநகராட்சிக்கு 20 ஆம்புலன்ஸ் வாகனம் தேவைப்படுவதால் கீழ்க்கண்ட வகை வாகனங்கள் மாநகராட்சி நிதி மூலம் வாங்குமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

| | | |
|---|---|---|
| மேம்படுத்தப்பட்ட உயிர் காக்கும் உபகரணங்கள் பொருத்தப்பட்ட ஆம்புலன்ஸ் வாகனம் ஒன்றின் விலை ரூ.17.50 ல ட்சம் -5 எண்ணிக்கை | | : ரூ.87.50 லட்சம் |
| அடிப்படை உயிர் காக்கும் உபகரணங்கள் பொருத்தப்பட்ட ஆம்புலன்ஸ் ஒன்றின் விலை ரூ.11.50 லட்சம் - 15 எண்ணிக்கை | | ரூ.172.50 லட்சம் |
| | | ரூ.260.00 லட்சம் |
| | மொத்தம் | ரூ.2.60 கோடி |

மேற்காண் 20 ஆம்புலன்ஸ் வாகனங்கள் நல்ல தரமுள்ளதாகவும், சிறப்பு அம்சங்களுடன் தமிழ்நாடு மருத்துவ பணி கழகம், எக்மோர், சென்னை மூலம் வாங்குவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதால் ரூ.2.60 கோடிக்கு காசோலை நிர்வாக இயக்குனர் , தமிழ்நாடு மருத்துவ சேவை கழகம் சென்னைக்கு அனுப்பி வைக்குமாறு கேட்டுள்ளார்கள்.

மேலும் 20 வாகனங்களின் பராமரிப்பு செலவு, எரிபொருட்கள் செலவு ஆகிய தமிழ்நாடு அரசு ஏற்பாட்டின்படி அவசர மருத்துவ சிகிச்சை மேலாண்மை ஆராய்ச்சி நிலையத்தின் மூலம் செய்து மாநகராட்சி பகுதியில் உள்ள பொது மக்களுக்கு இலவசமாக ஆம்புலன்ஸ் வசதி அளிக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

பார்வையில் காணும் மாமன்ற தீர்மான எண். 119. நாள். 17.06.2008-ல் மேம்படுத்தப்பட்ட உயிர் காக்கும் உபகரணங்கள் பொருத்தப்பட்ட ஆம்புலன்ஸ் வாகனம் ஒன்றும், அடிப்படை உயிர் காக்கும் உபகரணங்கள் பொருத்தப்பட்ட ஆம்புலன்ஸ் மூன்றும் ரூ.52.லட்சத்திற்கு மட்டும் வாங்க அனுமதித்து தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது. இத்தொகைக்கு அரசு அனுமதி வேண்டி 21.07.2008 மற்றும் 26.08.2008 ஆகிய தேதிகளில் அரசுக்கு கடிதம் அனுப்பப்பட்டுள்ளது.

கோவை மாநகராட்சி சட்ட பிரிவு 99 (F), தமிழ்நாடு அரசு அவசர சட்டம் எண். 6/2008- ன்படி ரூ.50 லட்சத்திற்கு மேல் 1 கோடி வரையிலான மதிப்பீட்டு தொகைக்கு மாமன்றம் ஒப்புதல் வழங்கலாம் என சட்ட திருத்தம் செய்யப்பட்டுள்ளது

அதன்படி, மேம்படுத்தப்பட்ட உயிர் காக்கும் உபகரணங்கள் பொருத்தப்பட்ட ஆம்புலன்ஸ் வாகனம் ஒன்று ரூ.17.50 லட்சம் செலவிலும், அடிப்படை உயிர் காக்கும் உபகரணங்கள் பொருத்தப்பட்ட ஆம்புலன்ஸ் வாகனங்கள் மூன்று ரூ.11.50 x 3 = 34.50 லட்சத்திலும் ஆகமொத்தம் ரூ.52 லட்சம் செலவில் மாநகராட்சி நிதியிலிருந்து வழங்குவதற்கும், அரசு சிறப்பு செயலாளர், சுகாதாரம் மற்றும் குடும்ப நலத்துறை மற்றும் திட்ட இயக்குநர், தமிழ்நாடு அரசு சுகாதார அமைப்பு திட்டம், சென்னை அவர்களின் கடிதத்தில் குறிப்பிட்டுள்ளபடி மேற்காண் நான்கு ஆம்புலன்ஸ் வாகனங்கள் சென்னையில் உள்ள தமிழ்நாடு மருத்துவ சேவை கழகம் மூலம் வாங்குவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதால் ரூ.52 லட்சத்திற்கு காசோலை நிர்வாக இயக்குநர், தமிழ்நாடு மருத்துவ சேவை கழகம் சென்னைக்கு அனுப்பலாம். அதன் பொருட்டு திருத்தப்பட்ட மாமன்ற பொருள் ஒப்புதல் வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு :- அனுமதி வழங்கலாம் ந.க.எண். 7603 /2008/ எம். இ.1

**மா.ந.ம.தீர்மானம் எண் : 288 நாள் : 28.11.2008**

அலுவலகக் குறிப்பு அனுமதிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி

---

## பொருள் எண் 9

பொருள் - கோயம்புத்தூர் மாநகராட்சி – மேற்கு மண்டலம் - சாஸ்திரி மைதானம் - 20.12.08 முதல் 28.12.08 வரை சர்வதேச மனித உரிமைகள் தினத்தை முன்னிட்டு " 8 வது தேசிய மாநாடு" நடத்த வாடகை அடிப்படையில் அனுமதிக்க மன்றத்தின் அனுமதி வேண்டுதல்- சம்பந்தமாக.

---------------

கோயம்புத்தூர் மாவட்ட தலைமை அமைப்பாளர், மனித உரிமைகள் கழகம் அவர்களின் 06.10.08-ம் தேதிய விண்ணப்பத்தில் கோவை மாநகராட்சி மேற்கு மண்டலத்திற்குட்பட்ட சாஸ்திரி மைதானத்தை மனித உரிமைகள் கழகம் " 8 வது தேசிய மாநாடு " நடத்த 20.12.08 முதல் 28.12.08 வரை அனுமதி கேட்டு விண்ணப்பித்துள்ளார்.

மேற்படி மாநாடு நடத்துவதற்கு மாநகரக் காவல் துறையின் தடையின்மைச் சான்றிதழ் பெற்று வழங்குமாறு 16.10.08-ந் தேதிய இவ்வலுவலக கடிதம் மூலம் விண்ணப்பதாரருக்கு தெரிவிக்கப்பட்டுள்ளது.

கோவை மாநகராட்சி மேற்கு மண்டலத்திற்குட்பட்ட சாஸ்திரி மைதானத்திற்கு நாள் ஒன்றுக்கு வாடகை ரூ. 1000/- ம் வீதம் 9 நாட்களுக்கு ரூ. 9000/- மற்றும் முன்பணம் ரூ. 10000/- பெறலாம்.

எனவே மனித உரிமைகள் கழகம் "8வது தேசிய மாநாடு " நடத்த மாநகர காவல்துறையின் அனுமதி பெறப்பட வேண்டும் என்ற நிபந்தனையின் பேரில் சாஸ்திரி மைதானத்தை 20.12.08 முதல் 28.12.08 வரை உபயோகம் செய்து கொள்ள அனுமதி வழங்கும் பொருட்டு மன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு - அனுமதிக்கலாம். ந.க.எண். 10164/08 /D2W

**மா.ந.ம.தீர்மானம் எண் : 289 நாள் : 28.11.2008**

அலுவலகக் குறிப்பு அனுமதிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது. சாஸ்திரி மைதானத்திற்கு தினசரி வாடகையாக ரூ. 1000/- எனவும், முன்பணமாக ரூ. 10,000/- என நிர்ணயம் செய்யவும் இனிவரும் காலங்களில் ஆணையரே அனுமதி வழங்க அனுமதிக்கவும் தீர்மானிக்கப்பட்டது.

(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி

---

## பொருள் எண் 10

அரசாணை எண். 1443, ரூரல் டெவலப்மெண்ட் மற்றும் உள்ளாட்சி நிர்வாக துறை நாள். 22.9.1980 –ன்படி, கோயம்புத்தூர் மாநகராட்சி ஆர்.எஸ்.புரம், அருணாச்சலம் சாலையில் உள்ள மாநகராட்சிக்கு சொந்தமான 28 குடியிருப்புகளை அதன் ஒதுக்கீட்டாளர்களுக்கு கிரையம் செய்து வழங்க அனுமதி அளித்துள்ளதின்படி ஏற்கெனவே 24 –குடியிருப்புகளுக்கு மாநகராட்சியால் கிரையம் செய்து வழங்கப்பட்டுள்ளதுபோக, மீதமுள்ள 4 குடியிருப்புகளில் தற்பொழுது 3 குடியிருப்புகளுக்கு உரிமை மாற்றம் மற்றும் கிரையம் செய்து வழங்க கோரி காலம்சென்ற ஒதுக்கீட்டாளர்களின் வாரிதாரர்களான 1. திரு. சி.டி. பாலு (லேட்) அவர்களின் வாரிசுதாரர்களில் திரு. பா. குணவேலு, என்பவரும் 2. திரு, எஸ். சையத்கவுஸ் (லேட்) அவர்களின் வாரிசுதாரர்கள் (அ) திரு. சாதிக்பாட்சா (ஆ) திரு. மகபூப்பாட்சா மற்றும் 3. திரு. சி.கே பாலகிருஷ்ணன் அவர்களின் வாரிசுதாரர்கள் செல்வி பா. வித்யாநாயகி மற்றும் ஐவர் ஆகியோர் மேற்கண்ட சொத்தினை கிரையம் செய்து வழங்க கோரியுள்ளனர்.

இது குறித்து மாநகராட்சி வழக்கறிஞர் அவர்களை கருத்துரு வழங்க கோரப்பட்டதில் மாநகராட்சி வழக்கறிஞர் அவர்கள் தமது கருத்துரையில் மேற்கண்ட கதவுஎண். 8, (புதியது 4) அருணாச்சலம் சாலை குடியிருப்பினை ஒதுக்கீட்டாளர் திரு. சி.டி. பாலு, 11.6.92 –ல் காலம் சென்று விட்டபடியாலும், அவரது மனைவி திருமதி. காளியம்மாள் அவர்கள், 10.10.2003 –ம் தேதியிலும், அவரது மகன் திரு. முருகராஜ் என்பவர் 3.9.1995 –லும் மற்றும் மற்றொரு மகன் திரு. லிங்கராஜ் என்பவர் 31.3.2007லும் காலமாகிவிட்டனர் எனவும் காலம் சென்ற ஒதுக்கீட்டாளர்களின் வாரிசுதாரர்களான, 1. திருமதி. ரங்கநாயகி (மகள்) 2. திரு. லிங்கராஜ்(லேட்) அவர்களின் வாரிசுதாரர்கள் எல். கோமதி (மருமகள்) 3. பி.எல். யுவராஜ், 4. திரு. குணவேலு (மகன்) 5. திருமதி. நாகரத்தினம் (மகள்) 6. திரு. ஞானராஜ் (மகன்) 7. கிருஷ்ணராஜ் (மகன்) 8. திரு. சண்முகம் (மகன்) மற்றும் 9. பரமசிவம் (மகன்) ஆகியோருக்கு பாத்தியப்பட்டுள்ளதில் மேற்கண்ட நபர்களில் திரு. குணவேலு என்பவருக்கு மற்ற 8 வாரிசுதாரர்களும் மனை ஒதுக்கீடு செய்து வழங்க நோட்டரி மூலம் ஆட்சேபனையின்மை சான்று வழங்கியுள்ளனர்.

எனவே மேற்கண்ட மனை எண். 8 (புதியது 4) –ஐ திரு. குணவேலு த / பெ சி.டி பாலு அவர்கள் பெயரில் உரிமை மாற்றம் செய்வது குறித்தும் மற்றும் கதவு எண். 13, (புதியது. 16) அருணாச்சலம் சாலை குடியிருப்பு காலம் சென்ற ஒதுக்கீட்டாளர் திரு. சி.கே. பாலகிருஷ்ணன் என்பவருக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டது. அவர் கடந்த 2.11.96-ம் தேதியில் காலம் சென்றுவிட்டதாலும் அவர் எழுதி வைத்துள்ள உயில் சாசனம் பத்திரம் எண். 184 தேதி. 25.3.1992 –ன்படி மேற்கண்ட சொத்து வாரிசுதாரர்களில் அவரது மகள் திருமதி வத்சலா என்பவர் தவிர பிற வாரிசுதாரர்கள் 1. திருமதி. சரஸ்வதி (மனைவி) 2. செல்வி. வித்யாநாயகி (மகள்) 3. திருமதி. உஷாராணி (மகள்) 4. திருமதி. பிரசன்னகுமாரி (மகள்) 5. திருமதி. மகாலட்சுமி (மகள்) 6. திரு. ரவீந்திரன் (மகன்) 7. திரு. மணிகண்டன் (மகன்) ஆகியோருக்கு சேரத்தக்கதாக குறிப்பிட்டுள்ளார் எனவும் இதில் திருமதி. சரஸ்வதி அவர்கள் 11.6.2006 –ல் காலம் சென்றுவிட்டார். எனவே மீதமுள்ள 6 வாரிசுதாரர்கள் பெயரில் குடியிருப்பு பெயர் மாற்றம் செய்யலாம் எனவும் மேலும் கதவு எண். 18 (புதியது. 21) அருணாச்சலம் சாலை ஒதுக்கீட்டாளர் திரு. சையது கவுஸ் அவர்கள் கடந்த 23.1.1998 –லும் அவரது மனைவி திருமதி. எஸ். ஜெய்னாபீ 23.4.1996லும் காலம் சென்றுவிட்டதாலும். அவரது வாரிசுதார்களான 1. திரு. சாதிக்பாட்சா (மகன்) மற்றும் 2. திரு. மகபூப்பாட்சா (மகன்) ஆகிய இருவர் பெயரிலும் மேற்கண்ட குடியிருப்பினை கிரையம் செய்யலாம் என மேற்கண்ட 3 குடியிருப்புகள் குறித்து மாநகராட்சி வழக்கறிஞர் கருத்துரை வழங்கியுள்ளார்.

எனவே, கீழ்கண்ட பட்டியலில் குறிப்பிட்டு உள்ளவாறு,

| வ எண் | கதவு எண். | ஒதுக்கீட்டாளர் | காலம் சென்ற ஒதுக்கீட்டாளரின் வாரிசுதாரர்கள் |
|---|---|---|---|
| 1. | 8 (பு. 4) | திரு. சி.டி பாலு (லேட்) | திரு. பா. குணவேலு |
| 2. | 13 (பு. 16) | திரு.சி.கே.பாலகிருஷ்ணன் (லேட்) | 1. செல்வி. வித்யாநாயகி<br>2. திருமதி. உஷாராணி<br>3. திருமதி. பிரசன்னகுமாரி<br>4. திருமதி. மகாலட்சுமி<br>5. திரு. ரவீந்திரன்<br>6. திரு. மணிகண்டன் |
| 3. | 18(பு. 21) | திரு சையது கவுஸ் (லேட்) | 1. திரு. சாதிக்பாட்சா<br>2. திரு. மகபூப்பாட்சா |

மேற்கண்ட மாநகராட்சிக்கு சொந்தமான 3 குடியிருப்புகளை காலம் சென்ற ஒதுக்கீட்டாளர்களின் வாரிசுதாரர்கள் பெயரில் கிரையம் செய்து வழங்குவது குறித்தும் மற்றும் கிரையம் செலவுகள் அனைத்தும் சம்பந்தப்பட்டவர்களே செலுத்தும்படி கோரவும், மாமன்றத்தின் அனுமதி வேண்டி, பொருள் சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு -மாமன்றத்தின் முடிவுக்கு — ந.க.எண் 63139 / 89 / எம்.எச்5

**மா.ந.ம.தீர்மானம் எண் : 290 நாள் : 28.11.2008**

பொருளில் குறிப்பிடப்பட்டுள்ள 3 குடியிருப்புகளை பொருளில் குறிப்பிடப்பட்டுள்ள காலம் சென்ற ஒதுக்கீட்டாளர்களின் வாரிசுதாரர்கள் பெயரில் கிரையம் செய்து வழங்கவும், கிரய செலவுத் தொகைகளை வாரிசுதாரர்களிடமிருந்து வசூல் செய்து கொள்ளவும் தீர்மானிக்கப்பட்டது.

(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி

---

## பொருள் எண் 11

பொருள். கோயம்புத்தூர் மாநகராட்சி – மேற்கு மண்டலம், வார்டு எண். 49, டி.எஸ். எண். 147 / 2, 148 / 1, டி.எஸ். பிளாக். 4, டி.எஸ். வார்டு. எச்(8) திவான் பகதூர் சாலை, பகுதியில் 39 செண்ட் பரப்பளவு உள்ள இடத்தினை வணிக உபயோகமாக கட்டிடத்திற்கு 'பலமாடி கட்டிட பகுதி பிரகடனம்' அறிவித்தல் தொடர்பாக.

------------

கோயம்புத்தூர் மாநகராட்சி, மேற்கு மண்டலம் வார்டு எண். 49, டி.எஸ். எண். 147 / 2, 148 / 1, டி.எஸ். பிளாக். 4, டி.எஸ். வார்டு. எச்(8) திவான் பகதூர் சாலை, பகுதியில் 39 செண்ட் பரப்பளவு உள்ள இடத்தினை வணிக உபயோகமாக கட்டிடத்திற்கு பலமாடி கட்டிட பகுதியாக அறிவிப்பு செய்ய மனுதாரர் திரு.வி.என். சுப்பரமணியன் (பவர்ஏஜெண்ட்) மற்றும் தி/வா. ராசி அசட்ஸ் கார்ப் என்பவர் விண்ணப்பித்துள்ளார்.

இம்மனையிடத்திற்கு, நிலையில் 70 அடி அகல ஆர்.எஸ் புரம், டி.பி ரோடு சாலை அணுகுசாலையாக அமைந்துள்ளது. நகரமைப்பு திட்ட விதிப்படி டி.பி சாலை வணிக உபயோகத்திற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இந்நிலையில் மனுதாரரின் 39 செண்ட் நிலப்பரப்பினை பலமாடி கட்டிடப் பகுதியாக பிரகடனம் செய்வது பொருள் தொடர்பாக மாமன்றத்தின் முடிவுக்கு பொருள் சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு. மாமன்றம் முடிவு செய்யலாம். ந.க. எண் **10069 / 08 /** எச்1 (மே)

**மா.ந.ம.தீர்மானம் எண் : 291 நாள் : 28.11.2008**

பொருளில் குறிப்பிடப்பட்டுள்ள 39 செண்ட் பரப்பு உள்ள இடத்தினை பலமாடி கட்டிடம் கட்டும் பகுதியாக பிரகடனம் செய்ய அனுமதிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி

---

## பொருள் எண் 12

கோவை மாநகராட்சி ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புற புனரமைப்புத் திட்டத்தின்கீழ் குடிசைப்பகுதிகளில் உள்ள கூரை மற்றும் ஓட்டு வீடுகளுக்கு பதிலாக புதியதாக சிமெண்ட் கான்கிரீட் கூரை வீடுகள் கட்டுவதற்கு மாநகராட்சியில் 80 குடிசைப்பகுதிகள் தேர்வு செய்யப்பட்டுள்ளது.

தேர்வு செய்யப்பட்டுள்ள 80 குடிசைப் பகுதிகளில் கீழ்க்கண்ட குடிசைப் பகுதிகளில் வருவாய் துறை மூலம் பட்டா வழங்கப்பட வேண்டும். 12.11.2008-ம் தேதி மாவட்ட வருவாய் அலுவலர் அவர்கள் நடத்திய ஆய்வுக் கூட்டத்தில் பட்டா வழங்க மாநகராட்சி மூலம் மாமன்ற ஒப்புதல் பெற்று அனுப்பப்பட வேண்டும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

| வ.எண் | குடிசைப் பகுதியின் பெயர் | நில உபயோகத் தன்மை | பயனாளிகளின் விபரம் |
|---|---|---|---|
| 1 | தனலட்சுமி நகர் (க.ச.எண். 37, 38 உப்பிலிபாளையம் கிராமம்) | இட்டேரி | 18 |
| 2 | தண்டல் ராமன் வீதி (க.ச.எண். 9 சங்கனூர் கிராமம்) | மந்தை | 12 |
| 3 | அண்ணா நகர் (க.ச.எண். 301/1, சங்கனூர் கிராமம்) | மயானம் (மயானமாக பயன்படுத்தப் படாதது | 40 |

மேற்கண்ட இடங்களில் உள்ள மக்கள் சுமார் 30 வருடங்களாக அங்கு வீடு கட்டி வசித்து வருவதால், நில உபயோகத் தன்மையை கருதி நத்தமாக நிலமாற்றம் செய்து பட்டா வழங்க மாவட்ட ஆட்சியர் அவர்களுக்கு பரிந்துரை செய்ய மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு - பரிந்துரை செய்யலாம். ந.க.எண். 13089/ 06/ ஜெ.என். 3

**மா.ந.ம.தீர்மானம் எண் : 292 நாள் : 28.11.2008**

பொருளில் வரிசை எண். 2 மற்றும் 3, தண்டல்ராயன் வீதி, க.ச.எண். 9, சங்கனூர் கிராமம் மந்தை மற்றும் அண்ணா நகர் க.ச.எண். 301/1 சங்கனூர் கிராமம் மயானம் ஆகியவற்றை நத்தமாக நிலமாற்றம் செய்து வழங்க மாவட்ட ஆட்சியர் அவர்களுக்கு பரிந்துரை செய்ய தீர்மானிக்கப்பட்டது.

வரிசை எண் 1, தனலட்சுமி நகர், க.ச.எண். 37, 38 உப்பிலிபாளையம் இட்டேரி குறித்து பின்னர் முடிவு செய்து கொள்ளலாம் என தீர்மானிக்கப்பட்டது.

(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி

---

## பொருள் எண் 13

கோவை மாநகராட்சி பகுதியில் கீழ்கண்டுள்ள அபிவிருத்திப்பணிகளுக்கு ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டு கீழ்க்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளன. இப்பணிகளுக்கு வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகளை ஒப்பந்தப்புள்ளி திறனாய்வுக்குழு பரிசீலனை செய்து கீழ்கண்டவாறு பணிகளை ஏற்க பரிந்துரை செய்துள்ளது.

| வ. எண் | கோப்பு எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டுத் தோகை ரூ. இலட்சத்தில் | ஒப்பந்தப் புள்ளி நாள் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப் புள்ளி சதவீதம் |
|---|---|---|---|---|---|---|
| 1 | 7920/08/ எம்.டி.4 | வார்டு எண் 34 மீனாட்சி மகப்பேறு மருந்துவமனையில் கூடுதல் கட்டிடம் மற்றும் காம்பவுண்டு சுவர் கட்டுதல் | 25.00 | 16.10.08 முதல் அழைப்பு | தி/ள்.என்.பி.கே. அஸோசியேட்ஸ் | 4.85 அதிகம் |
| 2 | 9613/08/ எம்.டி.2 | வார்டு எண் 68 ரத்தினபுரி மாநகராட்சி உயர் நிலைப்பள்ளியில் மாணவர்கள் கழிப்பறை காவலர் அறை மற்றும் காம்பவுண்டு சுவர் கட்டுதல் | 25.00 | 21.10.08 முதல் அழைப்பு | திரு.ஆர். செல்வராஜ் | 1.64 அதிகம் |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 3 | 6230/08/ எம்.டி.2 | வார்டு எண் 23 சுங்கம் பிரிவில் குடிநீர் அபிவிருத்தி பணிகள் மேற்கோள்ளுதல். | 5.25 | 14.10.08 இரண்டாம் அழைப்பு | திரு.பி. சுனில்குமார் | 4.35 அதிகம் |
| 4 | 6969/08/ எம்.டி.4 | வார்டு எண் 12 நஞ்சுண்டாபுரம் ராசாத்தாள் கோவில் சந்தில் பொது கழிப்பிடம் கட்டுதல் | 8.50 | 07.10.08 முதல் அழைப்பு | தி/ள்.எம்.எஸ். இன்ஜினியர்ஸ் | 4.92 அதிகம் |
| 5 | 18688/08/ எம்.டி.4 | வார்டு எண் 36 தேவாங்க பேட்டை சாலை எண் 2-ல் வணிக வளாகம் கட்டுதல் பணி | 20.00 | 17.10.08 இரண்டாம் அழைப்பு | தி/ள்.என்.பி.கே. அஸோசியேட்ஸ் | 4.91 அதிகம் |
| 6 | 4645/08/ எம்.டி.4 | வார்டு எண் 43 ஒக்கிலியர் காலனியில் மாநகராட்சி உயர்நிலைப்பள்ளியில் மதிய உணவு உண்ணும் அறை கட்டுதல் | 9.20 | 17.10.08 முதல் அழைப்பு | தி/ள்.என்.பி.கே. அஸோசியேட்ஸ் | 4.84 அதிகம் |
| 7 | 8002/08/ எம்.டி.4 | வார்டு எண் 43 ஒக்கிலியர் காலனியில் மாநகராட்சி ஆரம்பப்பள்ளியில் மதிய உணவு உண்ணும் அறை கட்டுதல் | 9.20 | 7.10.08 முதல் அழைப்பு | தி/ள்.என்.பி.கே. அஸோசியேட்ஸ் | 4.84 அதிகம் |

மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளிகளுக்கு ஒப்புதல் பெற மாமன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு வரிசை எண்.1 முதல் 7 வரை உள்ள பணிகள் குறிப்பிட்ட கால கெடுவிற்குள் முடிக்க வேண்டியிருப்பதாலும், மறு ஒப்பந்தப்புள்ளி கோரினால் இதைவிட குறைவான விலைப்புள்ளிகள் பெற வாய்ப்பு இல்லாத காரணத்தினாலும் இப்பணிகள் அத்தியாவசிய அடிப்படை வசதிகள் உள்ளதாலும் மதிப்பீட்டைக் காட்டிலும் கூடுதல் சதவீதம் பெறப்பட்ட பணிகளுக்கு பொறியியல் பணி விதிகளின் படி மாமன்றத்தின் அனுமதி பெற வேண்டிள்ளதாலும் அனுமதிக்கலாம்.

ந.க.எண் 11619/07/எம்.டி.2

**மா.ந.ம.தீர்மானம் எண் : 293 நாள் : 28.11.2008**

அலுவலகக் குறிப்பு அனுமதிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி

---

## பொருள் எண் 14

வருவாய்த் துறையின் முதன்மைச் செயலாளர் அவர்களின் 29.9.2008 –ஆம் நாளைய அரசு கடித எண். 40025 / எல்.டி.வி.ஐ – 2 / 2008 – 1 –ல் மத்திய அரசின் உள்துறை செயலாளர் அவர்களின் கடிதம் மற்றும் உச்சநீதி மன்றத்தின் வழக்கு எஸ்.எல்.வி. எண். 8519 / 2006 –ல் பிறப்பித்த உத்தரவு ஆகியவைகளை சுட்டிக்காட்டி, அரசுபொது இடங்களில் சட்ட விதிகளுக்கு புறம்பாக மத வழிபாடு கட்டிடங்களை கட்டி ஆக்கிரமிப்புதாரர்கள் பொதுமக்களுக்கும், போக்குவரத்திற்கும் இடையூறு செய்வதாகவும், அதனைத் தடுக்கத் தேவையான சில வழிமுறைகளை சுட்டிக்காட்டி அதன் மீது மாநகராட்சியின் கருத்து கேட்கப்பட்டுள்ளது.

மத்திய, மாநில அரசுகள் மற்றும் உச்ச நீதி மன்றத் தீர்ப்பு ஆகியவைகளின் அடிப்படையில் அரசால் கீழ்க்கண்ட வரைவு வழிமுறைகள் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

1. பொது மக்களுக்கும், போக்குவரத்திற்கும் இடையூறாக அரசு பொது இடங்களில் உள்ள, அப்புறப்படுத்த வேண்டிய மத வழிபாடு கட்டிடங்களை கண்டறிதல்.

2. அவ்வாறு கண்டறியப்பட்ட மதவழிபாடு கட்டிட ஆக்கிரமிப்புகளை மக்களின் ஒத்துழைப்போடும், மக்களின் இறையாண்மை பாதிக்காத வகையிலும் மாற்றியமைக்க தேவையான நடவடிக்கைகளை எடுத்தல்.

3. இது போன்ற ஆக்கிரமிப்புகள் இனிவரும் காலங்களில் வராமல் தடுக்கத் தேவையான கொள்கை முடிவெடுத்தல்.

4. அரசு பொது இடங்களை தவறாக பயன்படுத்துவதை முன்கூட்டியே தடுக்கத் தேவையான சட்டத் திருத்தங்கள் அல்லது வழிமுறைகளை ஏற்படுத்துதல்.

5. இதுபோன்ற சட்ட விதி மீறல்களை எவ்வித எதிர்பார்ப்புமின்றி தடுக்கத் தேவையான கொள்கைகளை வகுத்தல்.

இப்பொருள் மீது எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் :- செய்யவேண்டிய பணிகளாவன:-

1. பொது மக்களுக்கும், போக்குவரத்திற்கும் இடையூறாக உள்ள அனைத்து மதவழிபாட்டுக் கட்டிடங்களை உடனடியாக மண்டல உதவிஆணையர்கள் மூலம் கண்டறியப்படுகிறது.

2. அவ்வாறு கண்டறியப்பட்ட மதவழிபாட்டு கட்டிட ஆக்கிரமிப்புகளை பொதுமக்களின் ஒத்துழைப்போடு அம்மக்களின் இறையாண்மை பாதிக்காத வகையில் மாற்றியமைக்க மாற்று இடம் தேர்வு செய்யப்படுகிறது.

3. இது போன்ற சட்டத்திற்கு புறம்பான ஆக்கிரமிப்புகள் இனிவரும் காலங்களில் அரசு பொது இடங்களில் பொதுமக்களுக்கும், போக்குவரத்திற்கும் இடையூறு செய்யும் வகையில் ஏற்படாதிருக்க மாநகராட்சி சட்டம், குற்றவியல் சட்டம், நகர் ஊரமைப்புச் சட்டம் - போன்றவைகளில் தேவையான அளவில் சட்டதிருத்தங்களை மேற்கொள்ளலாம் என்கிற கொள்கை அளவிலான முடிவெடுக்கலாம்.

4. சட்டத்திற்கு புறம்பாகவும், பொதுமக்களுக்கு இடையூறாகவும் ஆக்கிரமிப்பு செய்யும் இது போன்ற ஆக்கிரமிப்புதாரர்களை கடுமையாக தண்டிக்கும் வகையில் சட்டதிருத்தங்களை மேற்கொள்ளலாம்.

5. இதுபோன்ற சட்டவிதி மீறல்கள் மீது எவ்வித விருப்பு, வெறுப்பின்றி பாரபட்சமற்ற முறையில் நடவடிக்கை எடுக்கத் தேவையான கொள்கைகளை வகுக்கலாம்.

பொதுவாக, பொதுமக்களுக்கும் போக்குவரத்திற்கும் இடையூறாக இருந்து வரும் அனைத்து வகையான மத வழிபாட்டுக் கட்டிடங்களை மக்களின் ஒத்துழைப்போடும், அவர்களின் இறையாண்மை பாதிக்காத வகையிலும் மாற்றியமைக்கலாம் என அரசுக்கு கருத்துரை அனுப்பலாம்.

அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கலாம். ந.க.எண். 15233 / 08 / எம்.எச்5.

<u>மா.ந.ம.தீர்மானம் எண் : 294 நாள் : 28.11.2008</u>

அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி

---

பொருள் எண் 15

கோயம்புத்தூர் மாநகராட்சி வார்டு எண்-3 க.ச.எண்- 358/1 விளாங்குறிச்சி கிராமம் (புதிய எண் நகரளவு வார்டு 2 (26) பிளாக் எண்-4 டி.எஸ்.எண்-88,89,93 to 100 டி.எஸ்.எண்-85,91 (ஸ்ரீராமன் செட்டியார் தண்ணீர் பந்தல் அறக்கட்டளை) மேற்படி குறிப்பிட்டுள்ள இடத்தில் அமைக்கப்பட்டுள்ள குடியிருப்புகளை ஜி.ஆர்.ஜி-யில் இருந்து வடக்கு நோக்கி வரும் சாலை தொடர்ச்சியாக விளாங்குறிச்சி செல்ல தடைபடுவதால் வாகனங்கள் செல்ல மிகவும் சிரமமாக உள்ளது. எனவே, மேற்படி இடத்தில் உள்ள

கட்டிடங்களை அப்புறப்படுத்தி மேற்படி இடத்தின் கிழபுறம் உள்ள பார்க் (டி.எஸ்.எண்-84) இடத்தில் அமைக்கவும், விளாங்குறிச்சி சாலை இடையில் தடைபடாமல் தொடர்ச்சியாக செல்லவும் அரசின் ஒப்புதல் பெற்று இடமாறுதல் செய்யலாம். இடமாற்றம் செய்ய வேண்டிய குடியிருப்புபகுதி 1258ச.மீ பரப்பு, ஸ்ரீராமன் செட்டியார் தண்ணீர் பந்தல் அறக்கட்டளை இடம் 450ச.மீ பரப்பு, டி.எஸ்.எண்-84 பார்க் இடத்தின் பரப்பு 2333ச.மீ ஆகும். கோவை மாநகராட்சி, விளாங்குறிச்சி கிராமம், புல எண்-358/1 (எஸ். வளைவுப் பகுதியில் உள்ள குடியிருப்பு உரிமையாளர்களின் விபரங்கள்)

| வ.எண் | பெயர் | டி.எஸ் எண், க.ச.எண் / கிராமம் | பரப்பளவு ச.மீ |
|---|---|---|---|
| 1 | திரு.ராமதாஸ் மனைவி மணி, ராமதாஸ் மக்கள் சரவணன், சாரதி | 88 (358/1) விளாங்குறிச்சி கிராமம் | 0.155.5 |
| 2 | நஞ்சப்ப கவுண்டர் மகன் முத்துச்சாமிக் கவுண்டர் மக்கள், சுப்பிரமணியம், சண்முக சுந்தரம், சதாசிவம் | 89 (358/1) விளாங்குறிச்சி கிராமம் | 0.0144.0 |
| 3 | வேலுச்சாமி மனைவி ராமாத்தாள், மக்கள், பழனிச்சாமி, தனலட்சுமி | 97 (358/1) விளாங்குறிச்சி கிராமம் | 0.0108.5 |
| 4 | சின்னப்பகவுண்டர் மக்கள் சக்திவேல், செல்வராஜ், பாப்புக் கண்ணன், தங்கவேல் | 96 (358/1) விளாங்குறிச்சி கிராமம் | 0.0137.5 |
| 5 | பழனிக்கவுண்டர் மகன் ரங்கசாமி, ரங்கசாமி மகன் ராஜாமணி | 95 (358/1) விளாங்குறிச்சி கிராமம் | 0.0096.5 |
| 6 | கருப்புச்சாமி மகன் கந்தசாமி, கந்தசாமி மக்கள் ரங்கநாதன், ரவிச்சந்திரன் | 94 (358/1) விளாங்குறிச்சி கிராமம் | 0.0115.0 |
| 7 | பழனிச்சாமி மனைவி மயிலாத்தாள், மக்கள் ராஜேந்திரன், பாலசுப்பிரமணியம் | 93(358/1) விளாங்குறிச்சி கிராமம் | 0.0123.0 |
| 8 | வேலப்ப கவுண்டர் மனைவி பாப்பம்மாள், மக்கள் குப்புச்சாமி சுப்பிரமணி, நாராயணசாமி கிருஷ்ணமூர்த்தி | 98 (358/1) விளாங்குறிச்சி கிராமம் | 0.0130.0 |
| 9 | கருப்பண்ண முதலியார், மகன் பழனிச்சாமி, பழனிச்சாமி மக்கள் சுந்தர வடிவேல், ராஜேந்திரன் | 99(358/1) விளாங்குறிச்சி கிராமம் | 0.0130.0 |
| 10 | நடராஜன் மனைவி மயிலாத்தாள், மகன் ரமேஷ் | 100(358/1) விளாங்குறிச்சி கிராமம் | 0.0123.5 |
| 11 | ஸ்ரீராமன் செட்டியார் தண்ணீர் பந்தல் அறக்கட்டளை | 85,91 (358/1) விளாங்குறிச்சி கிராமம் | 0.0450.0 |
| | | மொத்த பரப்பளவு | 0.3113 |

மேற்படி விபரங்கள் நகரமைப்பு மற்றும் அபிவிருத்திக்குழுவின் ஒப்புதலுக்காக பொருள் சமர்ப்பிக்கப்பட்டதில் குழு தனது தீர்மான எண். 64 நாள் 22.09.2008 ல் "தண்ணீர்ப்பந்தல் சாலை, விளாங்குறிச்சி பகுதிகளில் பல தகவல் தொழில்நுட்ப பூங்காக்கள் உருவாகி வருதால் தண்ணீர்பந்தல் சாலையில் உள்ள போக்குவரத்து நெருக்கடி மேலும் அதிகமாகும் நிலை உள்ளதாலும் மேற்படி சாலையின் மத்தியில் குடியிருந்து வரும் குடும்பங்களை அருகில் உள்ள மாநகராட்சிக்கு சொந்தமான பொது ஒதுக்கீடு இடத்தில் குடியமர்த்திவிட்டு சாலையின் போக்கை நேர் செய்யலாம். பொதுத் திறவிடத்தை மாற்று உபயோகத்திற்கு பயன்படுத்துவதற்கும், இடங்களை பரிவர்த்தனை செய்வதற்கும், அரசிடமிருந்து தற்போதுள்ள தடை ஆணைகளிலிருந்து விதிவிலக்கு அளிக்கப்பெற்ற இத்திட்டத்தினை செயல்படுத்த மாமன்றத்திற்குப் பரிந்துரை செய்து தீர்மானிக்கப்பட்டது" என்று தீர்மானம் நிறைவேற்றியுள்ளதை மாநகர மன்றத்தின் ஒப்புதலுக்கு பொருள் சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு - மன்றத்தின் ஒப்புதலுக்கு ந.க.எண். 12755/08/எச்.2 (வ)

<u>மா.ந.ம.தீர்மானம் எண் : 295 நாள் : 28.11.2008</u>

நகரமைப்பு மற்றும் அபிவிருத்திக்குழு தீர்மானம் எண் 64 நாள் 22.9.08-ஐ ஏற்று பொருளில் குறிப்பிட்டுள்ள குடியிருப்புகளை அகற்றி பொருளில் குறிப்பிட்டுள்ள மாநகராட்சிக்கு சொந்தமான பொது ஒதுக்கீட்டு இடத்தில் குடியமர்த்த தீர்மானிக்கப்பட்டது.

பொதுத் திறவிடத்தை மாற்று உபயோகத்திற்கு பயன்படுத்தவும், நில பரிவர்த்தனை செய்து கொள்ளவும் அரசின் அனுமதி பெற தீர்மானிக்கப்பட்டது.

(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி

---

பொருள் எண் 16

பொருள் : கோயம்புத்தூர் மாநகராட்சி - பொறியியல் பிரிவு - குடிநீர் விநியோகம் - நீர்மானிக் கணக்கெடுப்பு - மகளிர் சுய உதவிக்குழு மூலம் மேற்கொள்ளுதல் - கட்டணம் நிர்ணயம் செய்தல் - குறித்து

பார்வை : 1. மாமன்ற தீர்மானம் எண். 234 நாள். 05.01.2005
2. மாமன்ற தீர்மானம் எண். 578 நாள். 31.03.2005

- - - - -

கோவை மாநகராட்சியில் நான்கு மண்டலங்களிலும் உள்ள குடிநீர் இணைப்புக்களின் எண்ணிக்கை 1,11,421 ஆகும். இவ்விணைப்புகளுக்கு நீர்மானிக் கணக்கெடுப்பு பணி உரிய காலக்கெடுவிற்குள் எடுக்காமல் மிகவும் காலதாமதம் ஏற்படுவதாக பொதுமக்கள் மற்றும் மாமன்ற உறுப்பினர்களால் புகார்கள் எழுப்பப்பட்டு வருகிறது.

பார்வை 1ல் காணும் மாமன்ற தீர்மானத்தின்படி, கோவை மாநகராட்சி குடிநீர் இணைப்புகளுக்கு மகளிர் சுய உதவிக்குழு மூலம் நீர்மானிக் கணக்கெடுப்பு பணிக்கு மாநகராட்சி குடிநீர் இணைப்புகளின் நீர்மானி நீர் நுகர்வு கணக்கிடல், கணக்கெடுப்பில் கண்டறிந்த நீர் நுகர்வு அளவிற்கு ஏற்ப கட்டணம் கணக்கிட்டு குடிநீர் கணக்கீட்டு அட்டையில் பதிவு செய்தல், மேலும் அலுவலக நீரமானி கணக்கெடுப்பு பதிவேட்டில் அன்றாடம் பதிதல், தினந்தோறும் எடுக்கப்பட்ட அளவுகள் பற்றி மண்டல அலுவலகத்தில் உள்ள கணினி மையத்தில் தினசரி அறிக்கை சேர்ப்பித்தல் போன்ற பணிக்கு மகளிர் சுய உதவிக் குழு மூலம் மேற்படி பணிக்கு ஒப்பந்தப்புள்ளி கோர மாமன்றம் தனது தீர்மான எண். 234 நாள். 05.01.2005ல் அனுமதி வழங்கியுள்ளது.

பார்வை 2ல் காணும் மாமன்ற தீர்மானத்தின்படி ஒரு கணக்கெடுப்பிற்கு ரூ. 1.25 என நிர்ணயம் செய்து இப்பணி ஒப்படைக்கப்பட்டுள்ளது. இத்தொகை குறைவாக இருப்பதனால் பணி ஒப்படைப்பு செய்த மகளிர் சுய உதவிக் குழுக்கள் பணிகளில் சுணக்கம் ஏற்பட்டுள்ளது. இக்கணக்கெடுப்பு பணிக்கு ஒரு கணக்கெடுப்பிற்கு ரூ.1.25 என நிர்ணயம் செய்யப்பட்டுள்ளதை உயர்வு செய்து நிர்ணயம் செய்து, மண்டல அளவில் தனித்தனியாக ஒப்பந்தப்புள்ளி கோரி இப்பணியினை மேற்கொண்டால் கணக்கெடுப்பு பணியினை சரியான காலக்கெடுவிற்குள் மேற்கொள்வதுடன் குடிநீர் கட்டணம் முறையாக வசூலிக்க இயலும்.

தற்போது மாநகராட்சியில் தெருவிளக்குகள் பராமரிப்பு செய்வதற்காக நியமிக்கப்பட்ட 20 மின்பணியாளர்கள், தேர்ச்சி திறனற்ற பணியாளர்கள் 8 நபர்கள், மற்றும் மகளிர் சுய உதவிக் குழு உறுப்பினர்கள் 21 நபர்கள் மூலம் குடிநீர்மானிக் கணக்கெடுப்பு செய்யப்பட்டு வருகின்றது. மாநகராட்சி பணியாளர்கள் 28 நபர்களை கொண்டு 28 வார்டுகளில் இப்பணியினை மேற்கொள்ள இயலும். மீதமுள்ள 44 வார்டுகளுக்கு மகளிர் சுய உதவிக்குழு உறுப்பினர்களைக் கொண்டு கணக்கெடுப்பு செய்யும் பணிகளை மேற்கொள்ளலாம்.

மேலும் கணக்கெடுப்பு செய்யும் நபர் தினசரி 40 முதல் 50 வீடுகள் மட்டுமே கணக்கெடுப்பு செய்யமுடியும். தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய 2008-2009ம் ஆண்டு விலைப்புள்ளி பட்டியலில் நீர்மானிக் கணக்கெடுப்பு செய்யும் நபருக்கு நாள் ஒன்றுக்கு ரூ.115 என நிர்ணியிக்கப்பட்டுள்ளது. மாநகராட்சி பகுதிகளுக்கு 10 விழுக்காடு கூடுதல் தொகை நிர்ணயம் செய்ய வழிவகை உள்ளது. எனவே ஒரு கணக்கெடுப்பிற்கு ரூ.1.25 என நிர்ணயம் செய்யப்பட்டுள்ளதை உயர்வு செய்து நிர்ணயம் செய்யவும், மண்டல அளவில் இப்பணிகளுக்கு ஒப்பந்தப்புள்ளி கோரி நிறைவேற்றவும் மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு : அனுமதிக்கலாம் ந.க.எண். 10718 / 2008 / டி.1

<u>மா.ந.ம.தீர்மானம் எண் : 296 நாள் : 28.11.2008</u>

பொருளில் குறிப்பிடப்பட்டுள்ள ஒரு கணக்கெடுப்பிற்கு ரூ. 2.50 என நிர்ணயம் செய்து, இப்பணியினை அரசு சாரா தொண்டு நிறுவனம் (NGO) மூலமாக 6 மாத காலத்திற்கு மண்டல அளவில் ஒப்பந்தப்புள்ளி கோரி நிறைவேற்ற தீர்மானிக்கப்பட்டது.

(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி

---

பொருள் எண் 17

கோவை மாநகராட்சி வடக்கு மண்டலப் பகுதிக்கு உட்பட்ட சொத்துவரி உரிமைதாரர்கள் தங்களது சொத்திற்கு விதிக்கப்பட்ட காலியிட வரி மற்றும் சொத்துவரி அதிகம் என ஆட்சேபனை செய்து மேல் முறையீடு செய்துள்ளார்கள்.

அதன் பேரில் கோவை மாநகராட்சி மேல் முறையீட்டு தீர்ப்பாயம் கீழே கொடுக்கப்பட்டுள்ள விபரப்படி காலியிட வரி மற்றும் சொத்துவரியினை குறைத்து உத்திரவு வழங்கி உள்ளது.

சொத்துவரி மேல் முறையீடுதாரர்களின் விபரம் மற்றும் மேல் முறையீட்டு தீர்ப்பாயத்தில் வரி குறைக்கப்பட்ட விபரப் பட்டியல் தனியாக பார்வைக்கு வைக்கப்படுகிறது.

பட்டியலில் கண்டுள்ள மனுதாரர்கள் மேல் முறையீட்டு தீர்ப்பாய உத்திரவின் அடிப்படையில் வரிகுறைப்பு செய்து கொடுக்குமாறு விண்ணப்பித்துள்ளார்கள்.
<u>பட்டியல்</u>

1. வரிசை எண் 1 முதல் 10 மற்றும் வரிசை எண் 19 ஆகிய இனங்களுக்கு 30% சதவிகிதம் குறைத்து கொடுக்கப்பட்டுள்ளது. ஏற்றுக் கொள்ளலாம்.

2. வரிசை எண் 11 முதல் 17 வரை உள்ள இனங்களுக்கு 31% முதல் 68% சதவிகிதம் வரை குறைத்து கொடுக்கப்பட்டுள்ளது. மனு அப்பீல் செய்ய காலதாமதம் ஆகிவிட்டபடியால் அதற்கு வழிவகை இல்லாததால் ஏற்றுக் கொள்ளலாம்.

3. வரிசை எண் 18 மற்றும் 20 ஆகிய இனங்களுக்கு உயர்நீதி மன்றம் மற்றும் கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம் அளித்துள்ள தீர்ப்பின் அடிப்படையில் ஏற்றுக் கொள்ளலாம்.

4. வரிசை எண் 21 முதல் 24 வரை உள்ள இனங்களுக்கு கட்டிட வரி விதிப்பு செய்யப்பட்ட நாட்களுக்கு முந்தைய 6 ஆண்டுகளுக்கு காலியிடவரி செலுத்தவேண்டும் என்ற மேல் முறையீட்டு தீர்ப்பாயத்தின் அடிப்படையில் காலியிடவரி ரத்து செய்யப்பட்டுள்ளதை ஏற்றுக் கொள்ளலாம்.

மேற்காண் பட்டியலில் கண்டுள்ள மனுதாரா்களின் சொத்துவரி குறைப்பு குறித்து மறு அப்பீல் செய்ய மாநகராட்சி வழக்கறிஞரின் கருத்து கோரப்பட்டது. வழக்கறிஞரும் தனது 14.05.2008 ம் தேதிய கருத்துரையில் மேற்காண் இனங்களுக்கு மறு அப்பீல் செய்ய காலதாமதம் ஆகிவிட்டபடியாலும் அதற்கு வழிவகை இல்லாததாலும் மேல் முறையீட்டு தீா்ப்பாய உத்திரவின் அடிப்படையில் காலியிட வரி மற்றும் சொத்துவரி குறைப்பு செய்யப்பட்டதை ஏற்று அமுல்படுத்துவது சிறந்தது என்று கூறியுள்ளாா்.

மேற்காண் விபரங்களை தெரிவித்து வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுவிற்கு பொருள் வைக்கப்பட்டதில் வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு தனது 16.06.2008 ம் தேதிய தீா்மானம் எண் 55-ல் ஒப்புதல் அளித்துள்ளது. இது தொடா்பாக மாமன்றத்தின் ஒப்புதலுக்கு பொருள் சமா்ப்பிக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு - அனுமதிக்கலாம். ந.க.எண். 2934/08/ஏ3 (வ)

**மா.ந.ம.தீா்மானம் எண் : 297 நாள் : 28.11.2008**

அலுவலகக் குறிப்பு அனுமதிக்கலாம் என தீா்மானிக்கப்பட்டது.

(ஒப்பம்) ஆா். வெங்கடாசலம்
மேயா்
கோயம்புத்தூா் மாநகராட்சி

---

## மாமன்ற சிறப்புத் தீா்மானம் எண் 2

புலியகுளம் தாமு நகா் மாநகராட்சி பெண்கள் உயா்நிலைப்பள்ளியை மேல்நிலைப்பள்ளியாக மாற்றித் தந்தால் தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட வகுப்பைச் சாா்ந்த மாணவிகள் மிகுந்த பயன் அடைவாா்கள். மேலும் பள்ளியை ஆண்/ பெண் இருபாலரும் பயிலும் பள்ளியாக மாறுதல் செய்தால் அதிகளவு மாணவ, மாணவிகள் படிக்கின்ற வாய்ப்புகள் ஏற்படும்.

எனவே மேற்படி புலியகுளம் தாமுநகா் பெண்கள் மாநகராட்சி உயா்நிலைப்பள்ளியை மேல்நிலைப்பள்ளியாக மாற்றிக்கொடுத்தும், இருபாலா் கல்வி பயிலும் பள்ளியாக மாற்றிக் கொடுக்கும்படியும் தி.மு.க. மாமன்றக் குழு தீா்மானத்தை முன்மொழிகிறது. எனவே மேற்படி தீா்மானத்தை அவையில் நிறைவேற்றி அரசுக்கு பரிந்துரை செய்து கொடுக்கும்படி அன்புடன் கேட்டுக் கொள்ளப்படுகிறது.

**மா.ந.ம.தீா்மானம் எண் : 298 நாள் : 28.11.2008**

அரசிற்கு பரிந்துரை செய்ய தீா்மானிக்கப்பட்டது.

(ஒப்பம்) ஆா். வெங்கடாசலம்
மேயா்
கோயம்புத்தூா் மாநகராட்சி

---

(ஒப்பம்) ஆா். வெங்கடாசலம்
மேயா்
கோயம்புத்தூா் மாநகராட்சி